THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

VIBHAG
6 MAR 1965
STATE LEGISLATURE, MADRAS

Saturday, 7th March 1964

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

ரிசர்வ் காடுகளில் மரங்கள் வெட்டிக் கடத்தப்படல்

**171 கேள்வி.—திரு. டி. கார்ச்சா கவுடர் : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா--*

(அ) அண்மையில் நீலகிரி ஜில்லா, கூடலூர் தாலூகா ரிசர்வ் காடுகளிலிருந்து (தொரப்பள்ளி எஸ்டேட் பக்கம்) சுமார் 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தேக்கு, ரோஸ்வுட், வெந்தேக்கு மரங்கள் கள்ளத்தனமாக வெட்டப்பட்டுக் கடத்தப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், விவரமென்ன ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) No.

(*b*) Does not arise.

திரு. ஜே. மாதா கவுடர் : கூடலூர் தொரப்பள்ளியில் 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மரங்களைப் பக்கத்துத் தோட்டத்துக்காரர் வெட்டி யானையின்மேல் வைத்துக் கடத்திக் கேரளாவுக்குக் கொண்டு போய்விட்டதாகக் கூறப்படுகிறது. டிப்பார்ட்மெண்ட் மூலமாகக் கம்பவுண்டிங் பண்ணுவதாகச் சொல்லப்படுகிறது. இது பற்றி அமைச்சர் அவர்கள் என்ன கூறுகிறார்கள் ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : கேள்வியில் மூன்று லட்சம் ரூபாய் என்று சொல்லியிருப்பதைத் தான் நான் 'இல்லை' என்று சொன்னேன். ஆனால் கம்பவுண்டிங் பண்ணிக் கொடுத்த தொகை 19,900 ரூபாய்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : முதலில் District Forest Officer *மதிப்பு போட்டு ஒரு லட்சம் ரூபாய் கட்ட வேண்டுமென்று கூறி அதற்குப் பிறகு 19,000 ரூபாயாகக் குறைக்கக் காரணம் என்ன ?*

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : தோட்டத்துக்குச் சொந்தக்காரர் ஒருவர் வெட்டியிருக்கிறார். அவருக்குத்தான் அதிகமாகப் போடப்பட்டிருக்கிறது. மற்றவர்

[7th March 1964

களுக்கெல்லாம் 100 ரூபாய் வீதம் 12 பேர்களுக்குப் போடப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் 21,000 ரூபாய் கம்பவுண்டிங் போடப்பட்டிருக்கிறது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இந்த விதமாக அநேக மரங்களை வெட்டி அந்த வழியில் கேரளாவுக்குக் கொண்டு போகிறார்கள். இப்போதுள்ள ஏற்பாட்டின்படி சௌக்கியை டவுனுக்குள் வைத்துக் கொண்டிருப்பதால், கூடலூருக்கு அந்தப் பக்கம் 30 மைல் தள்ளி பார்டர் இருப்பதால் கள்ளக் கடத்தலுக்கு வசதியாக இருக்கிறது. ஆகவே, கேரளா, தமிழ்நாடு பார்டரில் ஒரு சௌக்கியை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போது வைத்திருக்கிற சௌக்கி நல்ல முறையில் வேலை செய்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனையைப் பரிசிலனை செய்து அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : இவ்வாறு வெட்டப்பட்ட மரம் சர்க்கார் ரிசர்வ் பாரஸ்டில் இருந்ததாகும். சுமார் ஆறு மாத காலமாகவே அங்கிருந்து மரங்கள் வெட்டப்பட்டு யானையின்மேல் வைத்துக் கடத்திக்கொண்டு போனதாகச் சொல்லப்படுகிறது. அந்த வகையில் மூன்று லட்சம் ரூபாய் பெறுமானம் உள்ள மரம் வெட்டப்பட்டுக் கடத்தப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தில் பாதி டி.எப்.ஓ.க்கு லஞ்சமாகக் கொடுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது. இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விசாரித்தார்களா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : அப்படி எந்த விதமான தகவலும் என்னிடத்தில் இல்லை. டி.எப்.ஓ. முயற்சியால்தான் கேஸ் கண்டுபிடிக்கப்பட்டு தோட்டச் சொந்தக்காரருக்குக் கம்பவுண்டிங் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. வி. எஸ். எஸ். மணி : நீலகிரி ஜில்லாவில் கூடலூர் பகுதியில் பந்தலூர் தேவாலயத்திற்குச் சொந்தமான சுமார் 400 ஏக்கரில் Jungle பாரஸ்டை அழித்து ஒருவருக்குக் காண்ட்ராக்டுக்கு விடப்பட்டு மரங்கள் உற்பத்தி செய்வதற்குத் திட்டமிட்டு, பின்னர் அது முடியவில்லை என்று விடப்பட்டதன் காரணமாகப் பெருவாரியான நஷ்டம் ஏற்பட்டது அரசாங்கத்துக்குத் தெரியுமா? அதன் பேரில் சி.ஐ.டி. ரிப்போர்ட் கேட்கப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. து. ப. அழகமுத்து : வெட்டப்பட்ட மரங்களின் மொத்த கன அடி எவ்வளவு?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : வெட்டப்பட்ட மரங்களின் மதிப்பைக் கணக்கிட்டுதான் இந்த 'பைன்' போடப்பட்டிருக்கிறது.

7th March 1964]

திரு. பி. வி. சீராமுலு : இந்த மாநிலத்தில் வேறு எந்த எந்த இடத்தில் இவ்வாறு கள்ளத்தனமாக மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன ?

MR. SPEAKER : That is a general question. How can the Hon. Minister give the answer to a general question? The hon. Member may put a specific question about this matter.

திரு. அ. ப. அழகமுத்து : வெட்டப்பட்ட மரங்களின் மொத்த கன அடி எவ்வளவு? எந்த ரேட்டின் அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்பட்டது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : என்னிடம் அந்த விவரம் இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : மரங்கள் வெட்டப்பட்ட செய்தி சர்க்காருக்கு எப்போது வந்தது? சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொண்டது எப்போது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அந்தத் தேதி பற்றிய விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர் : விறகு 'கூப்'கள் எடுக்கிறவர்கள் தங்கள் கூப்புகளைச் சுற்றியுள்ள சர்க்கார் காடுகளில் இருந்து ஏராளமாக விறகுகளைக் கொண்டு போய்விடுகிருர்கள். இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : சில இடங்களில் அந்த மாதிரிப் புகார்கள் இருக்கின்றன. பாரஸ்டர்கள், பாரஸ்ட் கார்டுகள் எல்லாம் இதற்கான நடவடிக்கைகளை நல்ல முறையில் எடுத்துக் கொண்டு வருகிருர்கள். அந்த மாதிரி வெட்டிக் கொண்டு போகிறவர்களுக்கு சட்ட சபை உறுப்பினர்கள் சிபார்சு செய்யாமலிருந்தால் போதும்.

திரு. ர. ஜீவரத்தினம் : வட ஆற்காடு ஜில்லாவில் வேலூர் அருகில் உள்ள அமிரதி காட்டில் கள்ளக்கடத்தல் புகார்கள் வந்து இருக்கின்றனவா ? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அங்கிருந்து புகார் வந்திருக்கிறது. அதற்காக திடீரென்று காரில் சென்று கண்காணிக்கக்கூடிய மொபைல் யூனிட் ஒன்றை வைத்திருக்கிறோம். அது டி.எப்.ஓ. பொறுப்பில் இருந்து வருகிறது. அவர்கள் உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகிருர்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரியில் இந்தச் சம்பவம் நடந்து ஏறக்குறைய ஒரு வருஷம் ஆகிறது. ஆனல் இப்போது போலீசார் சில நிரபராதிகளைப் பிடித்து கேஸ் போட்டுக்

[7th March 1964

கொண்டிருக்கிறார்கள். அந்த மாதிரிப் புகார்க் கடிதங்களும் எனக்கு வந்திருக்கின்றன. கம்பவுண்டிங் போட்டதற்குமேல் போலீசார் இந்த மாதிரி நடவடிக்கை எடுக்கக் காரணம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அந்த மாதிரித் தகவல் ஒன்றும் என்னிடம் இல்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : தனிப்பட்டவர்களுக்குச் சொந்த மான காடுகளிலேயே மரத்தை வெட்டினால் 300, 500 என்று அபராதம் விதிக்கக்கூடிய நிலைமை இருக்கும்போது அரசாங்கக் காடுகளில் அத்தனை மரத்தையும் வெட்டும்வரை டி.எப்.ஓ.-வும் மற்ற அதிகாரிகளும் ஏன் எந்தவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : இந்தக் கேள்விக்கு ஆரம்பத்திலிருந்தே, என்ன நடவடிக்கைகள் எடுக்க முடியுமோ அவை எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று கூறியிருக்கிறேன். உதகை போன்ற மலைப் பகுதியில் மரங்களை வெட்ட ஆரம்பித்தால் அதன் அழகு போய்விடும் என்ற காரணத் தால்தான் தனியார் தங்களுக்குச் சொந்தமான தோட்டங்களில் மரத்தை வெட்டினாலும் அதைத் தடுப்பதற்கான சட்டத்தை வைத் திருக்கிறோம். அதேபோன்று ரிசர்வ் பாரஸ்டுகளிலும் மரத்தை வெட்டி விடாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் : என் தொகுதியில் சேர்வராயன் மலையில் புறம்போக்கு மரங்களை வெட்டிக் கொண்டு போனதாக கர்ணம் சர்க்காருக்குத் தெரிவித்ததின் காரணமாக 30 பேர்கள் அவர்களை அடித்துத் தொல்லை கொடுத்தது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அந்த கர்ணபரமாத்மா பற்றி எனக்குத் தெரியாது.

திரு. ஜே. மாதா கவுடர் : வெட்டியவர்கள் மீது நடவடிக்கை கள் எடுப்பது ஒருபுறமிருக்க பார்த்துக் கொண்டிருந்த, இதுவரை சும்மாயிருந்த டி.எப்.ஓ. அவர்கள்மேல் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் ? நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், அப்படி இருக்கக் காரணம் என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : டி.எப்.ஓ. பார்த்திருந்தார் என்று சொன்னால் நிச்சயமாக நடவடிக்கைகள் எடுத்திருப்பார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அமைச்சர் அவர்கள் ஒரு உப கேள்விக்குப் பதில் அளிக்கும்போது அந்தந்த சட்டசபைத் தொகுதி அங்கத்தினர்கள் சிபார்சு செய்யாமல் இருந்தால்

7th March 1964]

நல்லது என்று சொன்னூர்கள். மரங்களை வெட்டக் கூடாது என்பதைத்தான் சிபார்சு செய்கிறூர்களே தவிர வெட்டவேண்டு மென்று சொல்லவில்லை.

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர், கனம் அமைச்சர் அவர் களுக்குப் பதில் சொல்கிறூர்களா? கேள்வியைக் கேட்கலாம்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : அவ்விதமாக சிபார்சு செய்யாமல் இருந்தும்கூட, அதிகாரிகள் உடந்தையாக இருந்து அரசாங்கக் காடுகளில் இருந்து மரங்களை வெட்டிக் கொண்டு போயிருக் கிறூர்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

[பதில் இல்லை.]

Foreign Tour of State Police Officer

* 172 Q.—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have granted permission to any State Police Officer to visit the United States of America, in November 1963;

(*b*) the purpose of the visit; and

(*c*) the expenditure incurred by the Government in the matter?

The Hon. Sri P. KAKKAN : (*a*) The Inspector-General of Police, Madras, was permitted to leave India on earned leave from 21st October 1963 to 4th November 1963.

(*b*) Private.

(*c*) Nil.

திரு. து. ப. அழகமுத்து : எவ்வளவு நாட்கள் அவர்கள் லீவில் போயிருந்தார்கள்?

கனம் சபாநாயகர் : அதைத்தான் சொன்னூர்களே.

கனம் திரு. பூ. கக்கன் : ப்ரைவேட் விஸிட் என்று சொன்னேன்.

Madhavaram Dairy and Milk Project

* 173 Q.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any loss has been incurred by Madhavaram Dairy and Milk Project during the year 1961–62;

(*b*) if so, the reason therefor ; and

(*c*) the action taken to make good the loss?